# தடை செய்யப்பட்ட திருமனங்கள் - 2

## கூடாத திருமணங்கள்

**1. نكاح المعتدة – (இத்தா கால திருமணம்)** இத்தா-காத்திருப்பு- காலத்தில் இருக்கும் போது செய்யப்படும் திருமணம் கூடாது.

**2. (نكاح الموقت - نكاح المتعةنكاح التعليق முத்ஆ திருமணம் (தற்காலிகத்திருமணம்)** கூடாது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு பெண்ணை ஒப்பந்தம் செய்து திருமணம் செய்வது. இது அரபிகளின் பழக்கமாக இருந்தது. ஆரம்ப காலத்தில் போர்களில் ஈடுபட்டவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. பின்னர் இது தடைசெய்யபட்டு விட்டது கைபர்,ஹுனைன், அவ்தாஸ்,மக்கா போன்ற போர்களின் போது தடை செய்யபட்டதாக பல அறிவிப்புகள் **புகாரி,முஸ்லிம்,திர்மிதி, நஸாயீ, முவத்தா** போன்ற ஹதீஸ் நூலகளில் வந்தாலும் மக்கா வெற்றியின் போது தடை செய்யப்பட்டதாகவே தெளிவாகிறது. அந்தப்போர்களெல்லாம் ஒரே கால கட்டங்க ளில்தான் நடைபெற்றன.

“எனவே, அவர்களில் யாரிடம் (திருமணம் மூலம்) இன்பம் அனுபவிக்கிறீர்களோ அவர்களுக்குரிய மணக் கொடைகளை கட்டாயமாகக் கொடுத்து விடுங்கள்” **(அல் குர்ஆன் 4:24)** என்ற வசனத்தை தற்காலிகத் திருமணத்திற்கு ஆதாரமாகக் கொண்டு ஒரு நாள்,ஒருவாரம்,ஒரு மாதம் என குறித்த காலத்திற்கு தற்காலிகத் திருமணத்திருமணம் செய்து கொள்கின்றனர். தற்காலிகத் திருமணத்திற்குத் தடைவிதித்து இஸ்லாம் அதை ஹராமாக்கிவிட்டது.

அலி (ரலியல்லாஹு அனஹு) அவர்கள் கூறியதாவது: தவணை திருமணத்திற்கும், நாட்டுக்கழுதைகளின் இறைச்சிக்கும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தடைவிதித்தார்கள்.
**(ஆதாரம்: புகாரி-4216,5115,5523,6961,முஸ்லிம் 2738,2741, திர்மிதி, இப்னுமாஜா, நஸயீ, அஹ்மத், முவத்தா, தாரிமீ)**

சப்ரா பின் மஅபத் அல்ஜுஹனீ (ரலியல்லாஹு அனஹு) அவர்கள் கூறியதாவது: மக்கா வெற்றியின் போது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடன் நானும் சென்று போர் புரிந்தேன். அன்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள். மக்களே! தவணை முறைத் திருமணம் (அல்முத்ஆ) செய்து கொள்ள நான் அனுமதியளித்திருந்தேன். (இப்போது) அல்லாஹ் அத்திருமணத்திற்கு மறுமை நாள் வரை தடைவிதித்துவிட்டான். எனவே தவணை முறைத்திருமணம் செய்த பெண்ணைத் தம்மிடம் வைத்திருப்பவர் அவர்ளை அவர்ளது வழியில் விட்டுவிடட்டும். அவளுக்கு (மணக் கொடையாகக்) கொடுத்திருந்த எதையும் (திரும்பப் பெறவேண்டாம்.
**(ஆதாரம்: முஸ்லிம்-2730)**

**3.نكاح الشغار பெண்ணைக்கொடுத்து பெண்ணை எடுத்தல்)**

சிஆர் திருமணம் (பெண்ணைக்கொடுத்து பெண்ணை எடுத்தல்) பண்ட மாற்று வியாபாரம் போல அந்த காலங்களில் தனது மகளை ஒருவருக்கு மஹர் இல்லாமலே திருமணம் செய்து வைத்து அவரது மகளைத் தான் திருமணம் செய்யும் வழக்கமிருந்தது. இத்திருமணத்தை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தடை செய்துள்ளார்கள்.
**(ஆதாரம்: புகாரி,முஸ்லிம்,திர்மிதி,இப்னு மாஜா)**

**4. نكاح المحلل (ஹலாலாக்கி வைக்கும் திருமணம்)**

முஹல்லிலின் தீருமணம். (தஹ்லீல்-பிறருக்கு ஹலாலாக்கி வைக்கும் திருமணம்). முத்தலாக் விடப்பட்ட பெண்ணை வேறொருர் திருமணம் செய்து அவர் விவாகரத்து செய்த பிறகு தான் மீண்டும் தான் திருமணம்

செய்ய முடியும். இதற்காக அவளை ஒருவக்குத் திருமணம் செய்துவைத்து (செட்டப் செய்து) அவரை அடுத்தநாளே விவாகரத்து செய்யவைக்கும் திருமணத்திற்கே தஹ்லீல் திருமணம் எனப்படும்.(அதாவது நிகாஹ் முவக்கத். துற்காலிகத் திருமணம்) அவ்வாறு திருமணம் செய்பவருக்கு முஹல்லில் என்று கூறப்படும். இத்திருமணம் கூடாது.

(முஹல்லில்) ஹலாலாக்கித்தர திருமணம் செய்பவனையும், (முஹல்லல்) ஹலாலாக்ககித்தரப்படும் முதல் கணவனையும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சபித்தார்கள்.

**(ஆதாரம்: அஹ்மது, திர்மிதி,நஸாயீ)**

அது போன்றே நிகாஹ் தஇலீக் நிபந்தனையுடன் செய்யப்படும திருமணம். எனது தாயார் சம்மதித்தால் அல்லது அடுத்தமாதம் திருமணம் செய்வேன் காலவரையுடன் செய்விக்கப்படும் தீருமணங்களும் செல்லுபடியாகாது.

### 5.نكاح المزوجة للغير (மாற்றான் மனைவியைத் திருமணம் செய்வது)

அடுத்தவன் மனைவியை ஏமாற்றி அல்லது பலவந்தப்படுத்தி அல்லது அவளது விருப்பத்தோடு அழைத்துச்சென்று ஒருவன் திருமணம் செய்வது கூடாது. இன்னும் (போரில் பிடிக்கப்பட்டு உங்கள் ஆதரவிலிருக்கும் பெண்களைத்தவிர) கணவனுள்ள பெண்களைத் திருமணம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

**(அல்-குர்ஆன்4:42)** இது விபச்சாரமாகும்.

### 6.نكاح غير اللمسلمين (கலப்புத்திருமணம்)

அஹ்லுல் கிதாப் (வேதக்காரர்களான யூது கிறத்தவர்களை)த்தவிர உள்ள அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளாதர்களையும் (நாஸ்த்திகர்கள்)இணைவைக்கும் இந்துக்கள் போன்றவர்களையும் தருமணம் செய்வதும் கூடாது. இன்று நாட்டில் நடைமுறைபில் ஜாதிகளை இணைக்கும் கலப்புத்திருமண்ஙளை இஸ்லாம் அங்கீகரிக்கவும் இல்லை.

### 7. نكاح التسجيل – (பதிவுத்திருமணம்)

வலீ, இரு சாட்சிகள்,மணமக்களின் சம்மதம் (ஈஜாபு-கபூல்), மஹர் தொகை கொடுத்துத் திருமணம் செய்யாமல் செய்யப்படும் இரகசியமாகச் செய்யப்படும் திருமணமும் கூடாது.

### 8.نكاح الصغار (பால்யத்திருமணம்)

(அந்தப்பெண்கள்) உங்களிடம் (கடுமையான) உறுதி மொழி எடுத்துள்ளனா.

**( அல்-குர்ஆன் 4:21)**

இந்த வசனம் மூலம் ஒரு சிறுமியோ, சிறுவனோ திருமணம் பற்றிய விவரங்கழனைள அரியாதவர்கள். அவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் தகுதியற்றவர்கள். எனவே அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதுகூடாது. இந்த பால்யத்திருமணமும் இஸலாத்தில் தடைய செய்யப்பட்டுள்ளது.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**
**BATHUSHA.COM**